**C.C.No. 283 /2019** தேதி: **12.03.2026**

**மசா 1 திருமதி. கல்பனா த/பெ சோமசுந்தரம் நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். நான் எதிர் மனுதாரர்களுக்கு எதிராக கிழக்கு காவல்நிலையத்தில் 31.12.20218 ம் தேதி கொடுத்த புகார் மனு **மசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு நான் எதிர் மனுதாரர்களுக்கு எதிராக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு 08.02.2019 ம் தேதி கொடுத்த **புகார் மனு மசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1 வது எதிர் மனுதாரர் எழுதி கொடுத்த **ஒப்புதல் ஆவணம் (நகல்) மசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( எதிர் மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்)** எதிர் மனுதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென நீதிமன்றத்தை கேட்டு கொள்கிறேன்.

**1 வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனது தந்தை தஞ்சை நகராட்சிக்குட்பட்ட பள்ளியில் சத்துணவு துறையில் அமைப்பாளராக பணிபுரிந்தார். எனக்கு திருமணம் 2011 ம் வருடம் நடைபெற்றது . என்னை மயிலாடுதுறையில் திருமணம் செய்து கொடுத்தார். இந்த வழக்கில் பணம் கொடுக்கல் வாங்கல் குறித்து நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். வேலைக்கு பணம் கொடுக்கல் வாங்கல் என்பது ஊழல் தடுப்பு சட்டத்தின் படி குற்றம் என்றால் சரிதான். பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நேரம், நாள், தேதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தை ரூ. 1,40,000/- பணத்தை வேலைக்காக கொடுக்கப்பட்டது எந்த வகையான நோட்டுகள் என்றால் ரூ. 500/- மற்றும் ரூ. 100/- நோட்டுகள் ஆகும். அதேபோல் மற்ற நபர்களுக்கு எந்த தேதி, இடம், நேரத்தில் பணம் கொடுத்தார் என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் எனது தந்தைக்கு தெரியும். பொதுவாக அரசு பணி என்பது தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணையம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மூலம் தான் அரசு வேலை வழங்கப்படும் என்றால் சரிதான்.

2. எனது தந்தை அரசு வேலை வாங்கிதருவதற்கான முகவர் அல்ல என்றால் சரிதான். எனது தந்தை வட்டி தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. 1 வது எதிரிக்கும் எனது தந்தைக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் மூலம் தான் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சத்துணவு சங்க பணியாளர் கூட்டத்தில் தான் அவர்களுக்கு பழக்கம் ஏற்பட்டது. 1 வது எதிரி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரி அரசு பணியில் இருப்பதால் அவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் இந்த மனுதாக்கல் செய்துள்ளேன்

என்றாலும், நான் கொடுத்த உண்மை தன்மை அறியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி செல்வராஜ் எனது தந்தையிடமோ, மற்ற நபர்களிடமோ வேலை வாங்கி தருவதாக சொல்லவில்லை என்றாலும், எந்த வித பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை எதிரியிடம் வேலைக்காக கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தை எவ்வாறு தயார் செய்து வைத்திருந்தார் என்றால் வீட்டிலிருந்த கொஞ்சம் பணமும், மீதி பணத்தை வெளியில் கடன் வாங்கி கொடுத்தார். எனது தந்தை வைத்திருந்த பணத்திற்கு வருமான வரி காண்பித்துள்ளாரா என்றால் வருமான வரி காண்பிக்கும் அளவிற்கு பணம் இல்லை.

3. வீட்டில் எவ்வளவு பணம் இருந்தது , மீதம் எவ்வளவு பணம் எனது தந்தை கடன் வாங்கினார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரி மீது எனது தந்தைதவிர வேறு யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்துள்ளார்கள். எதிரி மீது எனது தந்தை காவல்நிலையத்தை தவிர வேறு எங்கும் புகார் கொடுக்கவில்லை என்றால் இல்லை. எதிரி மீது கொடுத்துளள புகாருக்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் காவல்நிலையத்தில் கொடுத்துள்ளரா என்றால் கொடுத்துள்ளார். இந்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனது தந்தை கூறிதான் தெரியுமா என்றால் சரிதான். எனக்கு நேரடியாகவும் தெரியும். எனது தந்தை கொடுத்த புகார் பற்றியோ , காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகார் பற்றியோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 2011 சம்பவ சமயத்தில் எனக்கு திருமணமாகி மயிலாடுதுறையில் இருந்தேன் என்றால் சரிதான். ஆனால் எனக்கு திருமணமாகி ஒரு மாதத்தில் நான் தஞ்சாவூர் வந்துவிட்டேன். அதனால் சம்பவம் குறித்து நேரடியாக தெரியும். எனக்கு 2021 ல் மறுமணம் நடந்தது என்றால்சரிதான்.

4. எதிரியிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள், ஆவணத்தில் கண்டுள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால்சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எனது தந்தை மோசடியாக உருவாக்கி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் எனது தந்தைக்கு யார் யார் தயார் செய்து கொடுத்தார்கள் என்ற விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.